தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 03.09.2013

### ரூ. 11.69 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள் அளிப்பு

புதுக்கோட்டையில் வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயக்குழுக்களுக்கு ரூ. 11.69 லட்சம் மதிப்பில் வேளாண் உபகரணங்கள் அளிக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆட்சியர் செ. மனோகரன் தலைமை வகித்து, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தைச் சோ்ந்த 4 விவசாயக் குழுக்களுக்கு தலா ரூ. 2.92 லட்சம் மதிப்புள்ள களை எடுக்கும் இயந்திரம், விசை உழுவை இயந்திரம், நாற்று நடவு இயந்திரம் ஆகிய இயந்திரங்களை நூறுசத மானியத்தில் வழங்கினார்.

சங்கங்கள் பதிவுச்சட்டத்தின் படி, பதிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்களிடமிருந்து, விவசாயிகள் குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்களைப் பெற்று, நவீன உத்திகளை மேற்கொண்டு, விளைச்சலை பெருக்குவதற்காக 100 சத மானியத்தில் இக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார். இதில், வேளாண் பொறியியல் துறை, செயற்பொறியாளர் எஸ். அறிவழகன் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் அ. ஜான்ஜோசப், வீரா. சிதம்பரம், உதவிப்பொறியாளர் ம. வெற்றிவேல்பாண்டியன் மற்றும் குழுத்தலைவர்கள் கு. கனகராஜ், பெ. முருகேசன், ச. ராஜகோபால், க. அப்துல்முத்தலீபு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர் ராமதீர்த்தார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பயிர்க் கடன் ரத்து கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

2012-13-ம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய  வலியுறுத்தி திருவாரூரில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியரகம் முன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், 60 வயது நிறைவடைந்த அனைத்து விவசாயிகளுக்கும் மாதம் ரூ. 3,000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்.வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தேவை. தேசிய அளவில் நீர்நிலைகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் அதிக நிதி ஒதுக்க வேண்டும். காவிரி டெல்டா பாசன, வடிகால், நீர்நிலை இருப்புகளை மேம்படுத்த ரூ 10,000 கோடி ஒதுக்க செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பயிர்க் காப்பீடுத் திட்ட இழப்பீடுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். நதிநீர் இணைப்பை உடனடியாகத் தொடங்க வேண்டும். நிபந்தனையின்றி அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டன.

திருத்துறைப்பூண்டி எம்எல்ஏ கே. உலகநாதன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாவட்டத் தலைவர் வீரமணி (பொ), செயலர் பி.எஸ். மாசிலாமணி, துணைச் செயலர்கள் சிவஞானம், பாண்டியன், பொருளர் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திருப்பத்தூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருப்பத்தூரில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் முல்லை தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் வே.துரைமாணிக்கம் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார்.

60 வயதைக் கடந்த விவசாயிகளுக்கு ரூ.3,000 வீதம் ஓய்வூதியம் வழங்க வேண்டும், ரயில்வே பட்ஜெட் போன்று விவசாயத்துக்கு தனியே பட்ஜெட் போட

வேண்டும், தென் பெண்ணை ஆற்றை கல்லாறு வழியாக பாலாற்றுடன் இணைத்து வாணியம்பாடி, திருப்பத்தூர்

பகுதியில் உள்ள ஏரிகள், குளங்களுக்குத் தண்ணீர் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதில் மாவட்டச் செயலர்கள் சாமிக்கண்ணு(வேலூர்), கண்ணு (கிருஷ்ணகிரி), மாநிலக் குழு உறுப்பினர் நந்தி, நிர்வாகிகள் டி.பெருமாள், கோவிந்தராஜி, ரகு, சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய கோரிக்கை**

வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க தருமபுரி மாவட்டக் குழு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை அளித்த கோரிக்கை மனு:

ரயில்வே துறையைப் போன்று விவசாயத் துறைக்கும் தனி பட்ஜெட் வேண்டும். 60 வயதைக் கடந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

அனைத்து விவசாயிகளுக்கும் தாமதமின்றி வறட்சி நிவாரணம் அளிக்க வேண்டும்.

வறட்சி நிலவுவதால் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

மேலும் நிகழாண்டில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி கடன் வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தென்னை இழப்பீடு பெற விண்ணப்பிக்கலாம்**

வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் கணக்கெடுக்கும் பணி நடைபெறுவதால், இழப்பீடு கோரும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த தென்னை மரங்களில் ஓராண்டுக்கு சராசரியாக 42 காய்களுக்கு குறைவாக காய்த்த மரங்கள் 50 சதத்துக்கு மேல் மகசூல் இழப்பு எனவும், 42 காய்களுக்கு மேல் காய்த்திருந்தால் 50 சதத்துக்கு குறைவு என மதிப்பீடு செய்யப்படுகிறது.

தென்னை மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகள் நிவாரணம் பெற 5 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் அல்லது உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி வறட்சி நிவாரண அறிக்கையில் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்தப் பணி 5 நாள்களுக்குள் முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும் என்றார் ஆட்சியர்.

**தருமபுரியில் பலத்த மழை**

தருமபுரியில் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் அவ்வவ்போது மழை பெய்து வந்தது. தருமபுரியில் சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு 9.30 மணிக்கு பலத்த மழை பெய்யத் தொடங்கியது. ஒன்றரை மணி நேரத்துக்கும் மேல் நீடித்த பலத்த மழையால் பெரும்பாலான சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தருமபுரி பேருந்து நிலையத்திலும் தண்ணீர் தேங்கியது.

தருமபுரியில் பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் பலத்த மழையால் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.

**விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்**

விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கக் கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் வே.துரைமாணிக்கம் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ஜெ.சீனிவாசன், மாவட்ட செயலர் எஸ்.கண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் துரைமாணிக்கம் பேசியது:

60 வயதைக் கடந்த விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதம் ரூ. 3 ஆயிரம் வீதம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். விவசாய துறைக்கும் தனி பட்ஜெட் போட வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

டி.ராமச்சந்திரன் எம்எல்ஏ, விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் எம்.இலகுமய்யா, இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட துணைச் செயலர்கள் டி.சின்னசாமி, நரசிம்மன், மாவட்டப் பொருளாளர் கெம்பன், விவசாயிகள் சங்க மாநிலக் குழு உறுப்பினர்கள் கே.எஸ்.கிருஷ்ணப்பா, என்.வி.வெங்கடாசலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணைக்குநீர்வரத்து மேலும் அதிகரிப்பு**

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால், அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

கர்நாடகத்தில் கடந்த மாதம் பெய்த தொடர் மழையால், அந்த மாநிலத்திலுள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி, அணைகளிலிருந்து உபரி நீர் காவிரியாற்றில் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது. கர்நாடகத்தில் மழை குறைந்ததால், உபரிநீர் திறப்பு நிறுத்தப்பட்டது. மேட்டூர் அணையில் டெல்டா பாசனத்துக்கு நீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் நீர்வரத்தைவிட நீர் திறப்பு அதிகமாக உள்ளதால், அணையில் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

இந்த நிலையில், கடந்த மூன்று நாள்களாக மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், ஞாயிற்றுக்கிழமை

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 10,031 கன அடியாக அதிகரித்தது. இது திங்கள்கிழமை மாலை நொடிக்கு 13,103 கன அடியாக அதிகரித்தது.

அணையின் நீர் மட்டம் 111.60 அடியாக இருந்தது. நீர் இருப்பு 80.70 டி.எம்.சியாக உள்ளது. மேட்டூரில் திங்கள்கிழமை காலை 42.30 மி.மீ மழை பதிவானது.

**பவானிசாகர் அணைநீர்மட்டம் 82.85 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 82.85 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,543 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன அடி நீரும், கால்வாயில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 17.24 டி.எம்.சி.

**ஒட்டன்சத்திரம் பகுதியில் கன மழை**

ஒட்டன்சத்திரம் பகுதியில் கன மழை பெய்ததால் கண்மாய்கள் நிரம்பி வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அம்பிளிக்கை, காப்பிலியபட்டி, தங்கச்சியம்மாபட்டி, அத்திக்கோம்பை, சாலைப்புதூர், மூலச்சத்திரம்,புதுஎட்டமநாயக்கன்பட்டி, கம்பிளிநாயக்கன்பட்டி ஆகிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 2 மணி நேரம் இடைவிடாது கன மழை பெய்தது. இந்த மழையால் 13 ஏக்கர் பரப்பரளவும், 25 அடி ஆழமும் கொண்ட கம்பிளிநாயக்கன்பட்டி குளம் 2 மணி நேரத்தில் நிரம்பியது. இதற்கு முன்னர் இந்த குளம் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு, நிரம்பியதாக அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர். தற்போது குளம் நிரம்பி மறுகால் பாய்கிறது. இந்தக் குளத்தின் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். அதே போல இப்பகுதியில் பெய்த கன மழையால் காலிபிளவர் செடிகள் தண்ணீரில் மிதத்து வருகின்றன. அவைகள் அழுகி வீணாகும் நிலை ஏற்பட்டு உள்ளது. ஒட்டன்சத்திரம் பகுதியில் சுமார் 63 மி.மீட்டர் மழை பெய்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை**

திண்டுக்கல் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் நத்தம் பகுதியைத் தவிர்த்து, பிற இடங்களில் சராசரியாக 18.84 மி.மீ., மழை பெய்தது. பகுதி வாரியாக பெய்த மழை விவரம் (மி.மீட்டரில்): திண்டுக்கல்-6.70, கொடைக்கானல்-26.80, நிலக்கோட்டை-17.40, பழனி-15.00, வேடசந்தூர்-15.73, ஒட்டன்சத்திரம்-18.40, வேடசந்தூர் புகையிலை மையம்-17.40, கொடைக்கானல் போட் கிளப்-30.00, காமாட்சிபுரம்-41.00 என மொத்தம் 188.43 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

**விவசாயத்துக்கு தனி பட்ஜெட் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

விவசாயத்துக்கு தனி பட்ஜெட் வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், சிவகங்கை கிளை சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை அரண்மனை வாசல் முன் திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ஆர். கலையரசன் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலர் என். லட்சுமணன் முன்னிலை வகித்தார். சிவகங்கை சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். குணசேகரன் துவக்கவுரையாற்றினார்.

இந்திய கம்யூ. கட்சியின் மாவட்ட துணைச் செயலர் தங்கமணி, மாநிலக் குழு உறுப்பினர் கே. கோபால், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி. விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விவசாயத்துக்கு தனி பட்ஜெட் வேண்டும், 60 வயது கடந்த அனைவருக்கும் மாதம் ரூ. 3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும், வறட்சி நிவாரணம், பயிர் காப்பீட்டுக்கான தொகையை வழங்க வேண்டும், அரசனூரில் கிராஃபைட் தொழில் பூங்காவுக்காக விளை நிலங்களை கையகப்படுத்தக் கூடாது என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**வறட்சி நிவாரண வெள்ளை அறிக்கை வெளியிடக்கோரி ஆர்ப்பாட்டம்**

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கியது தொடர்பான வெள்ளை அறிக்கையை ஆட்சியர் வெளியிட வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்க மாவட்டச் செயலாளர் பி.ராமசாமி தலைமை வகித்தார். நகரச் செயலாளர் சீனிவாசன் முன்னிலை வகித்தார். 60 வயது முடிந்தவர்களுக்கு மாதந்தோறும் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கண்மாய்களை விரைவில் தூர்வார வேண்டும்.

அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டதா என்பது குறித்து ஆட்சியர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், வட்டாரத் தலைவர் முருகேசன் மற்றும் செயலாளர் ராமதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி, நீலகிரியில் கன மழை வாய்ப்பு**

கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால் தமிழகத்தில் கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர், கோவை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் மிதமான மழையோ அல்லது கன மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகம் மற்றும் புதுவையின் கடலோரப் பகுதிகளிலும் மழைக்கு வாய்ப்புள்ளது. சனிக்கிழமை நிலவரப்படி தமிழகத்தின் கடலோர பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தமிழகத்தில் வேலூர், தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, திருப்பூர், திண்டுக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மிதமான மழை அல்லது கன மழை பெய்யக்கூடும்.

மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும், புதுவையிலும் மழை பெய்க்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சென்னை வானிலை: சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 81 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும்.

சனிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): கிருஷ்ணகிரி மாவட்டம் கேன்கனிகோட்டை- 100, கரூர் மாவட்டம் பஞ்சபட்டி, சங்கரன்கோவில், ஓமலூர்- 70, நீலகிரி மாவட்டம் நடுவட்டம், பெரியகுளம், கிருஷ்ணகிரி மாவட்டம் ராயகோட்டை-50, சிவகாசி, மேட்டூர், பாப்பிரெட்டிபட்டி, குமாரபாளையம்- 40.

**ஓய்வூதியம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

சிதம்பரத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் உதவிஆட்சியர் அலுவலகம் முன்பு திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

60 வயதை கடந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.  பயிர் காப்பீட்டுத் தொகையை தாமதமின்றி உடனே வழங்க வேண்டும். விவசாயத் துறைக்கு தனிபட்ஜெட் அறிவிக்க வேண்டும்.

கான்சாகிப் வாய்க்காலில் நகரின் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் பி.வேல்முருகன் தலைமை வகித்தார். ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட துணைத் தவைவர் டி.மணிவாசகம், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் வி.எம்.சேகர், மாவட்டத் தலைவர் எஸ்.ரங்கசாமி, கெப்ரவத் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் விளக்கவுரையாற்றினர்.

**மானிய விலையில் தென்னங்கன்றுகள் விநியோகம்**

கடலூர் வட்டார விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

நெய்வேலியில் உள்ள தென்னை வளர்ப்புப் பண்ணை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகளை வழங்கி வருகிறது.

அதன்படி இந்தாண்டு கடலூர் வட்டாரப் பகுதி விவசாயிகளுக்கு ஏற்கெனவே 50 சதவீதம் மானிய விலையில் 2 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது மேலும் 2 ஆயிரம் தென்னங்கன்றுகள் கடலூர் வேளாண் அலுவலகத்தில் வரவழைக்கப்பட்டுள்ளன.

இந்த தென்னங்கன்றுகள் கடலூர், தூக்கணாம்பாக்கம், கீழ்குமாரமங்கலம் பகுதியில் உள்ள விவசாய அலுவலகத்தில் மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட வேளாண்துறை அறிவித்துள்ளது.

**விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் தவம் கிடக்கும் போராட்டம்**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் திங்கள்கிழமை தவம் கிடக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீட்டுமனைப் பட்டா, ரேஷன் கார்டு மற்றும் முதியோர் உதவித்தொகை உள்ளிட்டவற்றை உடனடியாக வழங்கக் கோரி அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தவம் கிடக்கும் போராட்டம் திங்கள்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி சங்க வட்டச் செயலர் கோகுல கிறிஸ்டீபன் தலைமையில் ஏராளமான பொதுமக்கள் பாலக்கரை, திலீபன் சதுக்கத்திலிருந்து ஊர்வலமாக வந்து கோட்டாட்சியர் அலுவலகம் முன் தவம் கிடக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து கோட்டாட்சியர் ஆனந்தகுமாரை சந்தித்து கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவைப் பெற்றுக் கொண்ட கோட்டாட்சியர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதைத் தொடர்ந்து விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் கலைந்துச்

சென்றனர்.

போராட்டத்தின்போது, மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் தண்டபாணி, கோவிந்தன், அசோகன், கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

விவசாயிகளின் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி புதுச்சேரி விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத் தலைவர் எம்.மாசிலாமணி தலைமை வகித்தார்.

60 வயதைக் கடந்த விவசாயிகள் அனைவருக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

ரயில்வே துறையைப் போல், விவசாயத்துக்கும் தனி நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

புதுச்சேரி-காரைக்கால் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டதால் கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றி பயிர்க்கடன் வழங்க வேண்டும்.

நெல்லுக்கான ஊக்கத்தொகையை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இதில் வலியுறுத்தப்பட்டன.

நிர்வாகிகள் து.கீதநாதன், வா.இளங்கோ உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.09.2013**

## நாட்டின் பருத்தி ஏற்றுமதி1 கோடி பொதிகளாக இருக்கும்

புதுடில்லி:வரும், 2013-14ம் பருவத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 1 கோடி பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) இருக்கும் என, இந்திய பருத்தி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.இந்தியாவில், பருத்தி பருவம் என்பது, அக்டோபர் முதல் செப்டம்பர் வரை கணக்கிடப்படுகிறது. இவ்வகையில், நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.55 கோடி பொதிகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.அதேசமயம், நாட்டின் பல மாநிலங்களில், மழை பொழிவு நல்ல அளவில் உள்ளதால், எதிர்வரும், 2013-14ம் பருவத்தில், பருத்தி உற்பத்தி, 3.72 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்நிலையில், நம்நாட்டிலிருந்து, அதிகளவில் பருத்தி இறக்குமதி செய்து கொள்ளும் சீனாவில், இதன் கையிருப்பு அதிகமாக இருப்பதுடன், பருத்திக்கான தேவையும் குறைந்துள்ளது. இதனால், எதிர்வரும் பருவத்தில், இதன் ஏற்றுமதி அதிக ஏற்ற, இறக்கமின்றி, ஒரு கோடி பொதிகளாக தான் இருக்கும் என, இந்திய பருத்தி கூட்டமைப்பின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வேம்பில் தயாராகும் பூச்சிக்கொல்லிகளுக்கு மவுசு கூடுகிறது

அகமதாபாத்:வேப்பிலை, வேப்பங் கொழுந்து, வேப்பம் பழம் ஆகியவற்றின் மூலம் தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளதால், அதன் பயன்பாடு, பெருகி வருகிறது.வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லி மருந்து துறையின் சந்தை மதிப்பு, 100 கோடி ரூபாய் என,

மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துறை, ஆண்டுக்கு, 7 - 9 சதவீதம் வளர்ச்சி கண்டு வருவதாக, எக்சிம் பேங்க் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டு பொருள்:அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:வேம்பின் விதைகள் மற்றும் இதர பாகங்களில் இருந்து தயாரிக்கப்படும், "அசாடிரச்டின்' என்ற கூட்டுப் பொருள், இயற்கையான பூச்சிக் கொல்லிகளுக்கு உரிய குணங்களைக் கொண்டுள்ளது. இதை, பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் செயற்கை பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு, மாற்றாக பயன்படுத்தலாம்.கடந்த, 2011ம் ஆண்டு நிலவரப்படி, சர்வதேச இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகளின் சந்தை மதிப்பு, 130 கோடி டாலராக இருந்தது. இது, 2012 மற்றும் 2017ம் ஆண்டுக்கு இடையில், சராசரியாக, ஆண்டுக்கு, 15.8 சதவீதம் என்ற அளவிற்கு வளர்ச்சி கண்டு, 320 கோடி டாலாராக உயரும்.இது, எதிர்காலத்தில், வேம்பின் அடிப்படையிலான பூச்சிகொல்லி மருந்து துறை, மேலும் வளர்ச்சி காண துணை புரியும்.

விதிமுறைகள்:ஐரோப்பாவில், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு கடுமையான விதிமுறைகள் உள்ளதால், அங்கு, இயற்கை பூச்சிக் கொல்லி மருந்து சந்தை, வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது.சென்ற, 2012ம் ஆண்டு, இந்தியாவில் இருந்து, வேம்பு விதைகள் உட்பட, வேம்பு அடிப்படையிலான பொருட்களின் ஏற்றுமதி, 57.30 லட்சம் டாலராக இருந்தது. இது, மொத்த வேம்பு பொருட்களின் ஏற்றுமதியில், 2.79 சதவீதமாகும்.அமெரிக்கா:அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகள், இந்தியாவில் இருந்து அதிக அளவில் வேம்பு சார்ந்த பொருட்களை இறக்குமதி செய்து கொள்கின்றன. கடந்த, 2011 - 12ம் நிதியாண்டில், அமெரிக்கா, 26.20 லட்சம் டாலர் மதிப்பிலான வேம்பு பொருட்களை இறக்குமதி செய்து, இப்பிரிவில் முதலிடத்தை பிடித்துள்ளது.

ஜப்பான், 2.80 லட்சம் டாலர் மதிப்பிலான, வேப்ப எண்ணெய் மற்றும் புண்ணாக்கையும், ஸ்பெயின் அதிக அளவில் வேம்பின் விதைகளையும் இறக்குமதி

செய்துள்ளன.இந்தியாவில், 2 கோடி வேப்ப மரங்கள் உள்ளன. இவற்றில் இருந்து, ஆண்டுக்கு, 35 லட்சம் டன் என்ற அளவில் கிடைக்கும், வேப்பங்கொட்டைகள் மூலம், 7 லட்சம் டன் வேப்ப எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.வேப்ப எண்ணெய் உற்பத்தி வளம் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. இருந்தபோதிலும், அதில், 30 சதவீதம், அதாவது, 2.5 லட்சம் டன் என்ற அளவிற்கு தான் வேப்ப எண்ணெய் உற்பத்தி உள்ளது.

வேப்ப மரங்கள்:இந்தியா, மியான்மர் ஆகிய நாடுகளை பூர்வீகமாக கொண்டது வேப்ப மரம். இதை, எஸ்.டி.ஐ. டீ.என்.ஆர்.சி., என்ற சர்வதேச அமைப்பு, கடந்த 1992ம் ஆண்டு, ஆசியாவின் பல பகுதிகள், ஆப்ரிக்கா மற்றும் உலகின் பிற பகுதிகளில் பயிரிட்டது.ஆனாலும், இன்றளவில், உலகின் மொத்த வேப்ப மரங்களில், 60 சதவீதம் இந்தியாவில் தான் உள்ளன.

## தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி சரிவு

தட்பவெப்ப மாறுதல்:காரணமாக, தென் மாநிலங்களில், தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக, தேயிலை உற்பத்தி சரிவடைந்து வருகிறது.நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கிய தென் மாநிலங்களின் பங்களிப்பு, 21 சதவீதமாக உள்ளது.வட

மாநிலங்கள்:நடப்பாண்டு, ஜனவரி முதல் ஜுன் வரையிலான ஆறு மாதங் களில், தென் மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 1.7 சதவீதம் சரிவடைந்து, 11.54 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

இது, சென்ற ஆண்டு, இதே காலத்தில், 11.74 கோடி கிலோவாக இருந்தது.அதே சமயம், இதே காலத்தில், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி, 6.7 சதவீதம் அதிகரித்து, 26.25 கோடி கிலோவில் இருந்து, 28 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதால், மதிப்பீட்டு காலத்தில், நாட்டின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி, 4.1 சதவீதம் உயர்ந்து, 38 கோடி கிலோவில் இருந்து, 39.5 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

சென்ற, 2012ம் முழு ஆண்டில், நாட்டின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி, முந்தைய ஆண்டை விட, ஒரு சதவீதம் அதிகரித்து, 112 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.நாட்டின் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், கடந்த ஆண்டு முதல், இந்திய தேயிலை ஏல மையங்களில், அதன் விலை ஏறுமுகமாகவே இருந்து வருகிறது.தேசிய அளவில், நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில்(ஜனவரி-ஜூன்), ஒரு கிலோ தேயிலை விலை, 13.2 சதவீதம் உயர்ந்து, 128.86 ரூபாயாக அதிகரித்துள்ளது.

தென் மாநிலங்களை பொறுத்தவரை, ஒரு கிலோ தேயிலை விலை, 23 சதவீதம் அதிகரித்து, 102.65 ரூபாயாக ஏற்றம் கண்டுள்ளது.மழை பொழிவு:இது குறித்து, தென்னிந்திய ஐக்கிய பெருந்தோட்டப் பயிர்கள் கூட்டமைப்பின் செய்தி தொடர்பாளர் ஆர். சஞ்சித் கூறியதாவது:தென் மாநிலங்களில், நடப்பாண்டின் முதல் காலாண்டில், வறட்சியும், இரண்டாவது காலாண்டில் கடுமையான மழைப்பொழிவும் இருந்தது. இந்த மாறுபட்ட பருவநிலை, தேயிலை பயிருக்கு உகந்தது அல்ல என்பதால், நடப்பாண்டு, அதன் உற்பத்தி குறையும்.மேலும், பல தேயிலைத் தோட்டங்களில், மறுசாகுபடி நடைபெறுகிறது. இதன் காரணமாகவும், நடப்பாண்டின் மூன்று மற்றும் நான்காம் காலாண்டுகளில், தேயிலை உற்பத்தி குறையும்.இத்தகைய போக்கால், தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக, தென் மாநிலங்களில் தேயிலை உற்பத்தி சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தேவை:நடப்பாண்டு துவக்கத்தில், தேயிலையின் தேவைக்கு ஏற்ப, அதன் அளிப்பு இருந்தது. அதனால், நடப்பாண்டு, தேயிலை விலை, உயரவோ, குறையவோ வாய்ப்பில்லை. தற்போதுள்ள விலையே நீடிக்கும்.தேயிலை உற்பத்தியும், ஏற்றுமதியும் குறைந்துள்ள போதிலும், அதன் தற்போதைய விலை உயர்வு, உள்நாட்டில் தேயிலை நுகர்வு அதிகரித்து வருவதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.சர்வதேச சந்தையிலும் இது போன்ற நிலை உள்ளது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, தேயிலைத் துறையில், இத்தகைய ஆரோக்கியமான சூழல்

காணப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## விதைநெல் கிடைக்காமல் விவசாயிகள் அவதி காங்., தொழிலாளர் யூனியன் பரபரப்பு புகார்

தஞ்சாவூர்: "தஞ்சையில், சம்பா பருவ சாகுபடிக்கு போதிய அளவில் விதைநெல், இடுபொருள் வேளாண்மை கிடங்குகளில் போதிய அளவில் இருப்பு இல்லை என, அதிகாரிகள் கூறுகின்றனர். அதனால், விவசாயிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே, உரிய அளவில் விதை நெல் இருப்பு வைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தமிழ்நாடு காங்., தொழிலாளர் யூனியன் தஞ்சை தெற்கு மாவட்டம் சார்பில், குறைதீர்க்கூட்டத்தில் டி.ஆர்.ஓ.,விடம் கோரிக்கை மனு அளித்தனர்.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கூட்டம் நடந்தது. இதில், பொதுமக்களிடம் டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார் மனுக்களை பெற்றார். இதில், தமிழ்நாடு காங்., தொழிலாளர் யூனியன் தஞ்சை தெற்கு மாவட்ட தலைவர் ராகவேந்திரதாசன் தலைமையில், துரை, விஜயகுமார், ஒரத்தநாடு நகர தலைவர் ரவிக்குமார், வட்டார தலைவர் அருள்மொழி வர்மா, யூனியன் ஒரத்தநாடு சட்டசபை தலைவர் சிவாஜிகணேசன் உள்ளிட்டோர், டி.ஆர்.ஓ.,விடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

அம்மனுவில் கூறியிருப்பதாவது:

ஒரத்தநாட்டில் பல்கலை., மகளிர் கல்லூரியில் நான்காயிரம் மாணவியர் படிக்கின்றனர். இந்த கல்லூரி வகுப்புகள் ஷிப்ட் முறையில் இயங்குகிறது. இதில், படிக்கும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மாணவியர் கல்லூரிக்கு வரும்போதும், போகும்போதும் பஸ் வசதியின்றி சிரமப்படுகின்றனர்.

இவர்கள் சிரமத்தை குறைக்கும் வகையில் ஒரத்தநாடு பஸ் டெப்போவில் இருந்து, தஞ்சை, பட்டுக்கோட்டைக்கு மகளிருக்கான சிறப்பு பஸ் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்துக்கு சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல், அதற்குரிய இடுபொருட்கள் அரசு வேளாண்மை கிடங்குகளில் இருப்பு இல்லை என, அதிகாரிகள் கூறுகின்றனர். இதனால், விவசாயிகள் வெளிச்சந்தையில் கூடுதல் விலை கொடுத்து விதைநெல்கள், இடுபொருட்களை வாங்குகின்றனர்.

எனவே, தட்டுப்பாடின்றி கிடைக்கவும், சம்பா பாசனம் நல்லமுறையில் நடந்து, நெல் உற்பத்தி அதிகரிக்கவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அதில் கூறியுள்ளனர்.

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருவாரூர்: திருவாரூரில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அறுபது வயது கடந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் மூன்றாயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும். பயிர் கடன் முழுமையாக வழங்க வேண்டும். கடந்தாண்டு கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

நதிநீர் இணைப்பினை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (இ.கம்யூ.,) சார்பில் திருவாரூர் கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ., உலகநாதன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி, துணை செயலாளர் பாண்டியன் மற்றும் நூறு பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

## தாண்டிக்குடியில் மழை பெய்தும் அணைக்கு நீர் வரத்து இல்லை

அய்யம்பாளையம்: தாண்டிக்குடியில் தொடர் ந்து மழை பெய்தாலும், மருதாநதி அணைக்கு நீர் வரத்து இல்லை.

அய்யம்பாளையம் மருதாநதி அணைக்கு பண்ணைக்காடு, தாண்டிக்குடி மலை கிராமங்கள் நீர்ப்பிடிப்பு பகுதிகள் ஆகும். கடந்த மூன்று நாட்களாக தாண்டிக்குடியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

மொத்த மழையளவு 114 மி.மீ., ஆகும். மலையிலிருந்து அணைக்கு வரும் நீர் வழிப்பாதைகளில், மலை விவசாயிகள் சிலர் தடுப்பணைகளை அமைத்து, நீரை அணைக்கு வராமல் தடுத்து உள்ளனர். தடுப்பணையில் தேங்கும் நீரை தங்கள் விவசாய பணிகளுக்கு பயன்படுத்துகின்றனர். இதனால் அணைக்கு நீர் வரத்து இல்லை. அணையில் நேற்று முன் தினம் 29 மி.மீ., பெய்த மழை மட்டுமே இப்பகுதி விவசாயிகளுக்கு ஆறுதலாக உள்ளது. தடுப்பணைகளை அகற்ற பொதுப்பணித் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தண்ணீர் பற்றாக்குறைால் 8 மாதங்களில் கரும்பு அறுவடை செய்யும் விவசாயிகள்

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் வறட்சியால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு சாகுபடி செய்துள்ள கரும்பு பயிர்களை அதன் முதிர்ச்சி காலம் முடிவதற்குள் விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர்.

பெரியகுளம் தாலுகா, மேல்மங்கலம், ஜெயமங்கலம், கோயில்புரம், குள்ளப்புரம், அ.வாடிப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, நல்லகருப்பன்பட்டி, சில்வார்பட்டி உட்பட பல கிராமங்களில், கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பணப்பயிராக கருதப்படும் கரும்புக்கு, அதிகமான தண்ணீர் தேவைப்படுகிறது. நடவு செய்த 12 மாதங்களுக்கு பிறகுதான் அறுவடை செய்ய முடியும். உழவு, நடவு, உரம் ஆகிய இடுபொருட்கள் என ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.

நல்லமுறையில் பராமரித்து போதிய அளவு தண்ணீர் பாய்ச்சினால் ஏக்கருக்கு 60 டன் கரும்பு கிடைக்கும். பெரியகுளம் பகுதியில் விளைச்சலாகும் கரும்பு அருகில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த ஓராண்டிற்கும் மேலாக பருவமழை பெய்யவில்லை. இதனால் விவசாயக்கிணறுகள் வறண்டு வருகின்றன.

காய்ந்து வரும் கரும்பு வயல்கள்: கோயில்புரம், பொம்மிநாயக்கன்பட்டி, சில்வார்பட்டி, அ.வாடிப்பட்டி உட்பட பல கிராமங்ளகளில் நடவு செய்யப்பட்டு 3 மாதங்கள் ஆகிய நிலையில் உள்ள 100 ஏக்கருக்கும் மேற்பட்ட கரும்பு வயல்கள் தண்ணீர் இன்றி காய்ந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அதிகமான பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஜெயமங்கலம் உட்பட சில

கிராமங்களில், கரும்பு நடவு செய்து 7, 8 மாதங்கள் ஆன நிலையில் நீரின்றி காய்ந்து வருகிறது. இதனால் அதன் முதிர்ச்சி காலம் முடிவதற்குள், முழுமையாக விளைச்சல் இல்லாத கரும்புகளை வெட்டி ஆலைக்கு அனுப்பி வருகின்றனர்

### ஏல விவசாயத்திற்கு மானியம்

ஏல விவசாயத்தில், புதிய நாற்றுகள் நடுவதற்கு "ஸ்பைசஸ் போர்டு மானியம்' வழங்க அறிவித்துள்ளது.

கேரளா, இடுக்கி மாவட்டத்தில் ஏல விவசாயம் நடந்து வருகிறது. இதில், அதிகமான விவசாயிகள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். கடந்த சில வாரங்களுக்கு முன்,தென்மேற்கு பருவ மழையால், இடுக்கி மாவட்டம் முழுவதும் கன மழை பெய்தது. இதில், பல செடிகள் சேதமடைந்திருப்பதால், புதிய நாற்றுகள் நடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக, விவசாயிகளுக்கு புதிய நாற்றுகள் மறு நடவு செய்வதற்கு, "ஸ்பைசஸ் போர்டு மானியம்' வழங்கி வருகிறது. கால் ஏக்கர் முதல், 20 ஏக்கர் வரை வைத்திருக்கும் விவசாயிகள் இந்த மானியத்தை பெறலாம். மேலும், ஏல விவசாயத்தில், அதிக உற்பத்தி செய்யும் விவசாயிக்கு முதல்பரிசாக ஒரு லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பத்தையும், மானியம் பெறுவதற்கான தகவலையும் பெற குமுளி, பெரியார் கிராமங்களில் உள்ள விவசாயிகள் 04869-222015 என்ற எண்ணையும், ஆனைவிலாசம், ஜக்குபள்ளத்தில் 04868-283635 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன் அடையலாம். வளர்ச்சி பணிகள் நடைபெறும்

### தொகை அதிகரித்தாலும் விவசாயிகள் திருப்தி! இயந்திரம் மூலம் நெல் நடவுப்பணி தீவிரம்திருமணம் செய்த மகச்ள் காலில் விழுந்து பெற்றோர் கதறல்

பவானி: பவானி, அம்மாபேட்டை யூனியன் பகுதியில், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக வலது கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில், இப்பகுதி விவசாயிகள், இயந்திரம் மூலம் நெல் நடவுப்பணிகளை தீவிரமாக செய்து வருகின்றனர்.

எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, தமிழகத்தில் கடந்த இரு ஆண்டுகள் வறட்சி

நிலவியது. இதனால் பல விவசாயிகள் பயிர் செய்யாமல், நிலங்கள் காய்ந்து கிடந்தது. இந்நிலையில், கடந்த இரு மாதமாக, கர்நாடகத்தில் பெய்த மழையால், மேட்டூர் அணை நிரம்பி, தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பவானி, அம்மாபேட்டை யூனியனுக்கு உட்பட்ட பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் நெல், வாழை, கரும்பு மற்றும் பல பயிர்கள் சாகுபடி செய்கின்றனர். தற்போது, இப்பகுதியில் இயந்திரங்களைக் கொண்டு நடவுப்பணிகள் வேகமாக நடந்து வருகிறது.

ஆட்கள் பற்றாக்குறை, விவசாய கருவிகளின் வருகையால், இயந்திர நடவில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

கூட்டுறவு சங்கம் மூலம், விவசாயிகளுக்கு நடவு பணிக்காக, வாடகை அடிப்படையில், இயந்திரம் வழங்கப்படுவதால், ஆர்வமுடன் அதை பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, கூட்டுறவு சங்க அதிகாரி கூறியதாவது:

தற்போது அறிவியல் தொழில் நுட்பத்தில் அறிமுகபடுத்தப்பட்ட நாற்று நடவு இயந்திரம் மூலம், ஒரு மணி நேரத்தில், ஒரு ஏக்கர் நடவு செய்ய முடியும்.

வாடகையாக, 3,600 ரூபாய் ஒரு மணி நேரத்துக்கு பெறப்படுகிறது.

இந்த இயந்திரம் கொண்டு நடவு செய்வதன் மூலம், சீரான நெல் நடவு செய்வதுடன், சற்று விளைச்சலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் ஆர்வமுடன் வாடகைக்கு எடுத்து செல்கின்றனர், என்றார்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்ட தொழிலாளர்களை, பல்வேறு திட்டப்பணிகளுக்காக அரசு பயன்படுத்தி வருகிறது. இதனால், விவசாய பணிகள் செய்ய, தற்போது ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது.

ஒரு ஏக்கர் நாற்று நடவு செய்ய, 10 முதல், 18 ஆட்கள் மூலமாக பணி மேற்கொண்டால், 2,300 முதல், 2,500 ரூபாய் செலவாகும். தற்போது இப்பணி செய்ய போதிய ஆட்கள் இன்றி, இயந்திரம் மூலம், 3,600 ரூபாய் கொடுத்து நடவு

பணியை செய்து வருகின்றோம். கூலி அதிகமாக இருந்தாலும், ஆட்கள் தேடுதல், ஒரு நாளைக்கு மேல் பணி செய்தல் போன்றவைகளை பார்க்கும்போது, இயந்திரம் மூலம், ஒரு நாளைக்குள் பணி முடிகிறது, என்பது திருப்தியாக உள்ளது.

அதிக அளவில் நிலம் வைத்துள்ள விவசாயிகள், வெளியூரில் இருந்து மொத்தமாக ஆட்களை அழைத்து வந்து, அவர்களுக்கு உணவு வழங்கி, நடவுப்பணி செய்கின்றனர்.

இதனால், கூடுதல் செலவும், நேரமும் விரயமாகிறது. இதற்கு மாற்றாக, இயந்திரம் பயன்படுத்தினால், வேகமாக பணி முடிகிறது, என விவசாயிகள் கூறுகின்றனர்.

### நெற்பயிரை விட அதிகளவில்...களை! நேர்த்தியில்லாத விதைகளால் வினை

ஆர்.கே.பேட்டை:அறுவடைக்கு காத்திருக்கும் வயலில், நெற்கதிர்களை விட, அதி-களவில் களைகள் முளைத்துள்ளதால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்து உள்-ளனர். இதற்கு நேர்த்தி செய்யப்படாத விதை நெல்லே காரணம் என, விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மாவட்டத்தில், நடப்பாண்டில், 84 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில், நெல் பயிரிட திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த, ஜூலை, 31ம் தேதி வரை, 21,876 ஹெக்டேர் நெல் பயிரிடப்பட்டது.

வேளாண்மை துறை, நெல் உற்பத்தியை அதிகரிக்க, நேர்த்தி செய்யப்பட்ட விதை-களை, விவசாயிகளுக்கு வழங்கியது.

மாவட்டத்தில், 30 வேளாண்மை விரிவாக்க மையங்களில், விதை நெல் விற்பனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களுக்கு திருத்தணி, கொழுந்-தலுார் (பாண்டூர்) மற்றும் தனியார் விதை விற்பனை மையங்களில் இருந்து விதை நெல் அனுப்பி வைக்கப்படுகின்றன.தற்போது, அறுவடை சமயத்தில், நெற்கதிர்-களை விட விளைநிலங்களில் களை செடிகள் அதிகளவில் வளர்ந்து உள்ளன. இதற்கு நேர்த்தி செய்யப்படாத விதை நெல் தான் காரணம் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விலை கிடைக்காது

களைகளுடன் நெற்பயிரை அறுவடை செய்யும்போது, அவற்றிற்கு எதிர்பார்த்த விலை கிடைக்காது. களைகளை நீக்கி நெற்கதிர்களை மட்டும் அறுவடை செய்-யவும் முடியாது.

இதனால், அறுவடை செய்யப்படும் நெல், வியாபாரிகளால் புறக்கணிக்கப்படும். மேலும், அந்த நெல்லை கொண்டு, அடுத்த பருவத்திற்கு, விதை நெல்லாக பயன்-படுத்த முடியாது. வேளாண் விற்பனை மையங்களில், ரசீது இல்லாமலும், விதை நெல் விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அதிகாரி கூறுகையில், ‘அங்கீகரிக்கப்பட்ட விதை மையங்களில், வாங்கிய விதை நெல் மூலம், களை அதிகம் இருந்தால், அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் அலுவலகத்தில் புகார் அளிக்கலாம்’ என்றார்.

புகார் தெரிவிக்க வேண்டிய இந்த எண்ணில் 0௪௪ உ௫௩௪ ௩௩௩௬ தொடர்பு கொள்ளலாம்.

## காய்கறி சேகரிப்பு மையம் துவக்கம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், காய்கறிகள் சாகுபடி செய்ய, 48 குழுக்களை, தோட்டக்கலைத் துறையினர் அமைத்துள்ளனர். இதில், 697 விவசாயிகள் பங்கேற்று, 1,696 ஹெக்டேர் பரப்பில், காய்கறி
சாகுபடி செய்துள்ளனர்.

சாகுபடி செய்யப்படும் காய்கறிகளை சேகரிக்க, சோழவரம்
ஒன்றியம், மல்லியங்குப்பம் கிராமத்தில், காய்கறி சேகரிப்பு மையம் துவக்கப்பட்-டுள்ளது. மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ், காய்கறி சேகரிப்பு மையத்தை துவக்கி வைத்து பேசுகையில், ‘மாவட்டத்தில் மேலும், மூன்று இடங்களில் இத்திட்டம் துவக்கப்படும்’ என்றார்.

## மொச்சை விதைத்த விவசாயிகள் மழையால் மகிழ்ச்சி

ஆர்.கே.பேட்டை:மானாவாரி பயிராக விதைத்த மொச்சை, சமீபத்திய மழையால் செழிப்பாக காணப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீர்வளம் குறைந்த பகுதிகள் மற்றும் மானாவாரி நிலங்களில், விவசாயிகள் கம்பு, மொச்சை போன்றவற்றை விதைத்துள்ளனர். இரண்டு மாதங்களுக்கு முன், விதைத்த மொச்சை செடிகள், தற்போது நன்கு வளர்ந்துள்ளன.

கோடை மழையை தொடர்ந்து விதைக்கப்படும் மொச்சை, நீர் பாசனம் ஏதும் இன்றி, வானம் பார்த்து விளையும் ரகத்தை சேர்ந்தது. மழை பெய்தால் மட்டுமே இவற்றுக்கு தண்ணீர் இல்லாவிட்டாலும், குறைந்த மகசூலுடன் செடிகள் வறட்சியை தாக்குப்பிடித்து வளரக்கூடியவை.

கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் மொச்சை அறுவடை துவங்கும். மூன்று மாத காலத்திற்கு விவசாயிகள் தினசரி அறுவடை நடத்துவர்.

மொச்சைக்கு உள்ளூரில் நல்ல சந்தை மதிப்பு உள்ளது. தினசரி சந்தை மற்றும் தெருக்களில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு, கிலோ, 30 முதல் ரூபாய், 40 ரூபாய் வரை, விற்பனை செய்யப்பட்டது. விற்பனை ஆகாமல் தேக்கமடைந்ததாக எந்த விவசாயியும் தெரிவிக்கவில்லை.

விதைப்பு, அறுப்பு இவற்றுக்கிடையே வேறு எந்த செலவும் இல்லாமல், அதிக லாபம் தரக்கூடியது என்பதால், மொச்சை நன்செய் நிலங்களிலும் விதைக்கப்படுகிறது. கடந்த வாரம் ஆர்.கே.பேட்டை பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக, மொச்சை செடிகள், பச்சை பசேலென காட்சியளிக்கின்றன. செடிகள், செழிப்பாக காணப்படுவதால், இந்த ஆண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## வெங்காய விலை தொடர்ந்து உயர்வு விவசாயிகள் சாகுபடியில் ஆர்வம்

விழுப்புரம்:வெங்காய விலை தொடர்ந்து உயர்வதால், விவசாயிகள் ஆர்வமுடன் பயிர் செய்ய துவங்கியுள்ளனர்.

வட மாவட்டங்களில் சாகுபடி செய்யும் தர

மிக்க வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்
கிறது.

விவசாயிகள் அறுவடை செய்வதில், தரம் குறைந்த வெங்காயம் மட்டும் தென் மாநிலங்களுக்கு விற்பனைக்கு வருகின்றன. ஆன் லைன் வர்த்தகம் அதிகரித்து, வெங்காய வரத்து குறையும் போது, கள்ளச்சந்தையில் பதுக்கி வைத்து, சிலர் கூடுதல் விலைக்கு விற்கின்றனர்.

இதன் ஒரு பகுதியாவே கடந்த மாதம் தமிழகத்தில், வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. கிலோ வெங்காயம் நூறு ரூபாய் வரை விலை போனது. தற்போதும் வெங்காயம் விலை உச்சத்தில் உள்ளது.

தற்போது விவசாயிகள் பலரும் விழுப்புரம் மாவட்டத்தில் குறைந்தளவு இடத்தில் வெங்காய சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்.

விக்கிரவாண்டி அடுத்த ஐவேலி கிராமத்தை சேர்ந்த விவசாயி வரதராஜன், தனது ஒரு ஏக்கர் நிலத்தில், வெங்காயம் நடவு செய்து பராமரித்து வருகிறார்.

## மழை பெய்து மகசூல் பெருகும் என ...எதிர்பார்ப்பு! ஏழு ஆயிரம் ஏக்கரில் பருத்தி சாகுபடி

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் பெய்த மழையால் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் மானாவாரி பருத்தி சாகுபடி செய்து நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

தியாகதுருகம் பகுதியில் ஆண்டு தோறும் சித்தலூர், நாலூகலூர், பானையங்கால், முடியனூர், விருகாவூர், பொரசக் குறிச்சி, வேளாக்குறிச்சி, ஈய்யனூர், கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம், புது உச்சி மேடு, கொங்கராய பாளையம், கூத்தக்குடி பகுதிகளில் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

நஷ்டம்

ஆண்டு தோறும் ஆக., மாதத்தின் துவக்கத்தில் விதைப்பு பணிகளை முடிக்கின்றனர். பின், பருவ மழை கைகொடுப்பதால் செடிகள் வளர்ந்து நல்ல

பலனை தருகிறது. கடந்த 2011ம் ஆண்டு இறுதியில் வீசிய தானே புயலில் பருத்தி செடிகள் மண்ணில் புதைந்து பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு பருவ மழை பெய்யாமல் போதிய தண்ணீர் கிடைக்காமல் செடிகள் காய்ந்ததால் மீண்டும் நஷ்டத்தை சந்தித்

தனர். இந்நிலையில் இவ்வாண்டு பருவமழை துவங்கி 2 மாதங்கள் வரை

தியாகதுருகம் பகுதியில் மழை பெய்யாமல் போக்கு காட்டி வந்தது. இதனால் பருத்தியை விதைக்க முடியுமா என்பதே கேள்விக்குறியானது. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி நம்பிக்கையுடன் விதைப்பு பணிகளைமுடித்தனர்.

வறட்சியை தாக்குபிடித்து கூடுதல் பலன் தரும் ஆர்.சி.எச்., 2, 20, 530, 533,

நுசிவீடு, சிறுத்தா, கணக், மல்லிகா ஆகிய ரக பருத்தி செடி களை இப்பகுதி

விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டுள்ளனர்.

அவ்வப்போது பெய்த மழையால் விதையில் இருந்து வெளிப்பட்டு செடிகள் செழித்து வளர்ந்து வருகிறது. தற்போது களை பறித்து செடிகளுக்கு ஊட்டச்சத்து உரங்களை தூவி பராமரிக்கும் பணிகளில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

நம்பிக்கை

கடந்த ஆண்டுகளில் அதிக மழை பெய்து காய்கள் அழுகியும், மழை பெய்யாமல்

செடிகள் காய்ந்தும் நஷ்டம் ஏற்பட்டதை போல் இல்லாமல் இந்த ஆண்டு கூடுதல் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றனர். தொடர்ந்து சீரான மழை இருந்தால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட நஷ்டத்தில் இருந்து மீண்டு லாபம் ஈட்ட முடியும் என்று விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

மானியத்தில் மருந்துகள்

வேளாண்துறைமூலம் பருத்தி செடிகளில் பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்கும்

வகையில் வேப்பெண்ணை மருந்து மற்றும் பி.டி.கே., தாவர பூச்சிக்கொல்லி

மருந்து ஆகியவை 50 சதவீத மானியத்துடன் அளிக்கப்படுகிறது. இதனை

தண்ணீரில் கலந்து செடிகளில் தெளிப்பதால் வேர் அழுகல், காய்களில்

பூச்சுதாக்குதல் உள்ளிட்ட நோய்களில் இருந்து பருத்தி செடிகளை

பாதுகாக்கமுடியும். அதேபோல் செடிகள் செழித்து வளர பருத்தி நுண்ணுரம் 50

சதவீத மானியத்துடன் வழங்கப்படுகிறது. இதனை தியாகதுருகம் வேளாண்துறை அலுவலகத்தில் தகுந்த சான்றிதழ்களை அளித்து விவசாயிகள் வாங்கி பயனடையலாம்.

## பாபட்லா நெல் சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

மரக்காணம்:மரக்காணம் பகுதியில் மானாவாரி பயிராக பாபட்லா நெல் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.
மரக்காணம் பகுதியில் மானாவாரி பயிராக பாபட்லா நெற்பயிரை விவ சாயிகள் பயிரிட்டுள்ளனர். அனுமந்தை, செட்டிக் குப்பம், செய்யாங்குப்பம், கீழ் பேட்டை, ஆட்சிக்காடு, ஆலப்பாக்கம், மஞ்சக் குப் பம் உள்ளிட்ட கிராமங்களில் 200க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் பாபட்லா நெல் பயிரிட்டுள்ளனர்.
இந்த பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு பருவ மழையின் போது ஏரி நிரம்பினால் நிலங்களுக்கு தண்ணீர் வரும். இப்பகுதி விவசாயிகள் தென் மேற்கு பருவமழை இந்த ஆண்டு கூடுதலாக பெய்யும் என்று நம்புகின்றனர். இதனால் பருவ மழையை நம்பி மானாவாரியாக பாபட்லா நெல் பயிரிட்டுள்ளனர்.

## வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் மீண்டும் கணக்கெடுப்பு

தமிழக அரசு, விவசாயிகளின் நலன் கருதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு, ஒரு ஏக்கரில் சாகுபடி செய்திருந்த தென்னையில், 50 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்டிருந்தால், ஏக்கருக்கு, 4,000 ரூபாய் வரட்சி நிவாரணமாக வழங்கப்படும் என அறிவித்தது.
அதனடிப்படையில், வேளாண் துறையினருடன் இணைந்து, வருவாய்த்துறையினர், அந்தந்த வட்டாரங்களில், 50 சதவீதத்துக்கு மேல் பாதிப்படைந்த தென்னைகள் குறித்த புள்ளி விபரங்களை, அரசுக்கு அனுப்பி வைத்தனர்.
அதனடிப்படையில், வட்டார அளவில், தென்னை பாதிப்புகள் அதிகம் இருந்தாலும், குறைந்த எண்ணிக்கையிலான விவசாயிகளே வரட்சி நிவாரண பயன் பெற முடிந்தது.
தற்போது, அரசு, புதிய விதிமுறைகளை வகுத்து, அதன்படி வறட்சியால்

பாதிக்கப்பட்ட தென்னைகள் குறித்த புள்ளி விவரங்களை கேட்டுள்ளதால், வருவாய்த்துறையினரும், வேளாண் துறையினரும் இணைந்து, விவசாயிகள் சாகுபடி செய்த மொத்த தென்னையில், 42 தேங்காய்களுக்கும் குறைவான தேங்காய்கள் காய்த்த மரங்கள் எத்தனை என, தற்போது கணக்கெடுத்து வருகின்றனர். இந்த புள்ளி விபரங்களின்படி வரட்சி நிவாரணம் வழங்கப்படும்.

### காய்கறி கழிவுகளில் மின்சாரம் தயாரிக்க திட்டம் : திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணி ஜரூர்

சேலம்: சேலம் மாநகராட்சியில், காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும், "பயோ மெத்தனைசேஷன்' திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக திட்ட மதிப்பீடு, தயார் செய்யும் பணி ஜரூராக நடந்து வருகிறது. சேலம் மாநகராட்சியில் நாள்தோறும், 600 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. ஹோட்டல் கழிவுகள், இறைச்சி கழிவுகள், உழவர் சந்தை மற்றும் தினசரி காய்கறி மார்க்கெட்டுகள் ஆகியவற்றின் மூலம், நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

செட்டிசாவடியில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், தினமும், 200 டன் குப்பைகள் மட்டுமே பெறப்படுகிறது. குப்பைகளை அள்ளி செல்லும் டிராக்டர் டிரைவர்கள், பொதுமக்களின் எதிர்ப்பை மீறி, கிச்சிப்பாளையம், வீராணம் ஆகிய குப்பை மேடுகளில் கழிவுகளை கொட்டி வருகின்றனர். பலர் புறம்போக்கு நிலங்கள், ஓடைகள் ஆகியவற்றில் குப்பைகளை கொட்டி, சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றனர்.

சேலம் மாநகராட்சியில், பயோ மெத்தனைசேஷன் முறையில், காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. சேலம் மாநகர பகுதியில், தினமும் குறைந்தப்பட்சம்,150 டன் வரை, காய்கறி கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இந்த கழிவுகளை, வீராணம் குப்பை மேடு அமைந்துள்ள பகுதிக்கு எடுத்து சென்று, அங்கு எரிவாயுவாக மாற்றி, அதிலிருந்து

மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம், தெரு விளக்குகளை எரிய வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சியில், ஒவ்வொரு மாதமும், லட்சக்கணக்கான ரூபாய் மின்சார கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.
இத்திட்டம் செயல்படுத்தப்படும் பட்சத்தில், மின் கட்டண செலவு கணிசமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும், மாநகரில் மலைபோல தேங்கி கிடக்கும் காய்கறி கழிவுகள், எந்த விதமான சிக்கலும் இல்லாமல், உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்கான வாய்ப்பும் உள்ளது. இதனால், சுகாதார பிரச்னையையும், ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும்.
இதுகுறித்து மாநகராட்சி கமிஷனர் அசோகன் கூறியதாவது:
சேலம் மாநகராட்சியில், ஒரு கோடியே, 50 லட்சம் ரூபாய் மதிப்பில், ஹோட்டல் மற்றும் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும், "பயோ மெத்தனைசேஷன்' திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. வீராணம் பகுதியில், இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு, 10,000 சதுர அடியில், 10 கிலோவாட் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், மாநகராட்சி தெருவிளக்குகளை எரிய வைக்க பயன்படுத்தப்படும். அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணி நடந்து வருகிறது.இவ்வாறு கூறினார்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 340 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை ஐந்து காசு உயர்த்தப்பட்டு, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 335 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.
தற்போது நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்து வருகிறது.

இது, பண்ணையாளர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 338, பெங்களூரு, 320, மைசூரு, 320, ஹைதராபாத், 306, மும்பை, 335, விஜயவாடா, 317, கோல்கத்தா, 350, பர்வாலா, 317, டில்லி, 328.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 60 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## 1,030 பருத்தி மூட்டை ரூ.20 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட, அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில், பருத்தி ஏலம் நடந்தது.

அதில், அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, மதியம்பட்டி, மாமுண்டி, ஆத்துமேடு தொட்டியப்பட்டி, மல்லசமுத்திரம், வெண்ணந்தூர், கட்டிபாளையம், ஓ.சவுதாபுரம், மின்னக்கல், மொஞ்சனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்த ஏலத்தில், 40 கிலோ கொண்ட, 1,030 பருத்தி மூட்டைகள் கொண்ட சுரபி ரகம் ஏலத்திற்கு வந்தது. ஏலத்தில், அதிக பட்ச விலையாக, குவிண்டாலுக்கு, 6,496க்கும், குறைந்த பட்ச விலையாக, 5,940க்கும் ரூபாய்க்கும் ஏலம் போனது.

மொத்தம், 20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி மூட்டைகள் ஏலம் போனது.

திருச்செங்கோடு, கொங்கணாபுரம், சேலம், ஆத்தூர், ஈரோடு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று, பருத்தியை ஏலம் எடுத்தனர்.

## விவசாயிகளுக்கு கருத்தரங்கு

பாலக்கோடு அடுத்த அமானிமல்லாபுரத்தில், பட்டு வளர்ச்சி துறை மற்றும் மாரண்டஹள்ளி பட்டு வளர்ச்சி தொழில் நுடப்ப சேவை மையம் சார்பில், விவசாயிகளுக்கு கருத்தரங்கு நடந்தது.

பாலக்கோடு பட்டு கூடு அங்காடி அலுவலர் முனிராஜ் தலைபமை வகித்தார். உதவி ஆய்வாளர் அர்ச்சுணன் வரவேற்றார். மண்டல இணை இயக்குனர் அலுவலக ஆய்வாளர் ரகுபதி, பட்டு வளர்ப்பில் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

அமானிமல்லாபுரம் பஞ்சாயத்து தலைவர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். உதவி வேளாண் அலுவலர் பிரகாஷ், வனவர் வெங்கடேசன், மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி ஹுமாயூன் ஷெரீப், "வெண்பட்டு உற்பத்தி மற்றும் பட்டு வளர்ப்பில் வெற்றி பெற செய்ய வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பட்டு வளர்ச்சி துறை அலுவலர்கள் பதில் அளித்தனர். இளநிலை பட்டு ஆய்வாளர்கள் மாரியன், குணசேகரன், சிவலங்கம், ராஜு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.09.2013**

**வரத்து அதிகம் பெரிய வெங்காயம் விலை சரிவு**



சென்னை : கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பெரிய வெங்காயம் அதிகம் வருவதால் விலை குறைந்துள்ளது. தற்போது கிலோ ரூ.40க்கு விற்பனை ஆகிறது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து லாரிகளில் வெங்காயம் வருகிறது. முன்பு மகாராஷ்டிராவில் இருந்து மட்டும் 40 லாரிகளில் பெரிய வெங்காயம் (பெல்லாரி) வந்தது. இப்போது ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் சீசன் தொடங்கியதால் அங்கிருந்தும் பெரிய வெங்காயம் வரத்து தொடங்கி உள்ளது.

தற்போது 60 லாரிகளில் வரத்து உள்ளது. இதனால் முன்பு மொத்த விலை கடைகளில் கிலோ ரூ.50க்கு விற்பனையான பெரிய வெங்காயம், தற்போது ரூ.40 ஆக குறைந்துள்ளது. மொத்த விலை கடைகளில் மற்ற காய்கறிகளின் விலை விவரம் (கிலோ): பீன்ஸ் ரூ.30, கேரட் ரூ.30, கத்தரி, ரூ.25, நூக்கல் ரூ.15, முருங்கைக்காய் ரூ.25, சின்ன வெங்காயம் ,ரூ.50, அவரை ரூ.30, வெண்டை ரூ.18, பாகற்காய் ரூ.17, கொத்தவரங்காய் ரூ.18, பீர்க்கங்காய் ரூ.18, காலிபிளவர்ரூ.15,

முள்ளங்கி ரூ.15, புடலங்காய் ரூ.15, பீட்ரூட் ரூ.12, தக்காளி ரூ.15, உருளைக்கிழங்கு ,ரூ.15, கோவக்காய் ரூ.17.

## கூலி உயர்வுகோரி 20 நாட்களாக நடைபெறும் கறிக்கோழி பண்ணையாளர்கள் வேலைநிறுத்தம் வாபஸ் ஆகுமா?



சென்னை : கூலியை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கடந்த 20 நாட்களாக கறிக்கோழி பண்ணையாளர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். கோரிக்கை குறித்து நாளை மறுதினம் அமைச்சர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஒரு கிலோ கோழி வளர்ப்புக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.3க்கு பதில் ரூ.16 என உயர்த்தி வழங்க வேண்டும்,

ஒரு கோழிக்கு வருடத்திற்கு ரூ.5 போனஸ் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 16ம் தேதி முதல் தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கம் மற்றும் கோழி பண்ணையாளர் சங்கங்கத்தினர் மாநிலம் தழுவிய வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் தமிழகத்தில் கோழிக்கறி விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. மக்களுக்கு தேவையான இறைச்சி கோழிகளை வியாபாரிகள் ஆந்திராவில் இருந்து வாங்கி விற்பனை செய்து நிலைமையை சமாளித்து வருகிறார்கள்.

இந்நிலையில், கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளின் மாநில அமைப் பாளரும், முன்னாள் எம்எல்ஏ ஜி.லதா மற்றும் நிர்வாகிகள் நேற்று தலைமை செயலகத்தில்,

கால்நடைத்துறை அமைச்சர் சின்னையா மற்றும் செயலாளர் விஜயகுமார் ஆகியோரை சந்தித்து பேசினர். பின்னர் லதா நிருபர்களிடம் கூறியதாவது: சுகுணா, சக்தி, சாந்தி, வென்காப் என 36க்கும் மேற்பட்ட கோழி நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ளது. இவர்கள் கோழி குஞ்சுகளை வளர்க்க கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் மற்றும் கோழி பண்ணையாளர்களிடம் கொடுக்கிறார்கள். 42 நாட்கள் கோழியை வளர்த்த பிறகு ஒரு கிலோ கோழிக்கு வெறும் ரூ.3 மட்டுமே கொடுத்து பண்ணையாளர்களிடம் இருந்து வாங்கி செல்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக இதே கூலியை வாங்கும் பரிதாப நிலை உள்ளது.

தற்போது ஒரு கிலோ கறிக்கோழியின் கூலியை ரூ.16ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்று 20 நாட்களாக போராடி வருகிறார்கள். ஆனால் கோழி நிறுவனங்கள் அவர்களது கோரிக்கையை கண்டுகொள்ளவில்லை. தற்போது அமைச்சரிடமும், செயலாளரிடம் எங்களது கோரிக்கையை கூறியுள்ளோம். தமிழக அரசு இதில் தலையிட்டு நல்ல முடிவை அறிவிக்க வேண்டும். இந்த தொழிலை நம்பி தமிழகம் முழுவதும் 50 ஆயிரம் குடும்பங்கள் உள்ளது. அமைச்சர் தலைமையில் நாளை மறுதினம் சென்னையில் முத்தரப்பு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் எங்களது கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் உடனடியாக வேலைநிறுத்தம் வாபஸ் வாங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.
எக்ஸ்ட்ரா தகவல்
தமிழகம் முழுவதும் உள்ள இறைச்சி கடைக ளுக்கு ஒரு வாரத்துக்கு 25 லட்சம் கறிகோழிகள் தேவைப்படுகிறது.

**மாடுகளை மேய்ச்சலுக்கு விட தடை திண்டிவனத்தில் பரவும் ஆந்த்ராக்ஸ் நோய்**



திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே நொளம்பூர் கிராமத்தில் மர்ம நோயால் 15 மாடுகள் சமீபத்தில் இறந்தன. மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் பரிசோதனை செய்ததில் ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி மாடுகள் இறந்தது தெரிய வந்தது.இந்நோய் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து சுமார் 8 கி.மீ. வரை பரவ வாய்ப்புள்ளது.இதையடுத்து 5 கால்நடை மருத்துவக்குழுவினர் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போட்டனர். இதற்கிடையே கடந்த 2 நாட்களுக்கு முன்பு மேலும் பல மாடுகள் அடுத்தடுத்து இறந்தன. இந்த நோய் மனிதர்களையும் தாக்கும் என்பதால் நொளம்பூர் கிராம மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கிராமத்தில் ஒலக்கூர் வட்டார மருத்துவ குழுவினர் முகாமிட்டு மக்களுக்கு தடுப்பு ஊசி போட்டு வருகிறார்கள். ஆர்டிஓ ஜெயச்சந்திரன், தாசில்தார் ஜெயகுமார் மற்றும் அதிகாரிகள் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை கணக்கெடுத்து வருகின்றனர். மாடுகளை சந்தைக்கு கொண்டு செல்லக் கூடாது, மேய்ச்சலுக்கு விடக்கூடாது என்று உத்தரவிட்டு உள்ளனர். மாநில கால்நடைத்துறை ஆணையர் பழனிசாமியும் நொளம்பூரில் நேற்று விசாரணை நடத்தினார்.

**விவசாயிகளுக்கு இலவச முந்திரி கன்றுகள்**

விருத்தாசலம், : விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில், தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 60 ஆயிரம் விஆர்ஐ முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்காக முந்திரி கன்றுகள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தது.
தற்போது முந்திரி கன்று களை வீரிய ரகத்துடன் ஒட்டுகட்டும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்ற னர். இவ்வாறு ஒட்டுகட்டப்படும் கன்றுகள் அதற்கென அமைக்கப்பட்டுள்ள குடிலின் உள்ளே பத்திரமாக பாதுகாக்கப்பட்டு, பின் துளிர் வந்தவுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.
இதுகுறித்து தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணிமொழி கூறும்போது, தேசிய தோட்டக்கலை திட்டத்தின் மூலமாக 2013-14ம் ஆண்டுக்கென விஆர்ஐ-3

ரக முந்திரி கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது. இதற்கென வளர்க்கப்பட்ட முந்திரி கன்றுகள் ஒட்டுகட்டும் பணிகள் தற்போது முழுவீச்சில் நடந்து வருகிறது. இதில் 70 ஆயிரம் கன்றுகள் வரையில் ஒட்டுகட்டப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன. இவைகள் விரைவில் கடலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும், என்றார்.

**விவசாயிகள் விளை நிலத்தில் பயிர் சாகுபடியுடன் மீன் குட்டை அமைக்கலாம்**

விருத்தாசலம், : விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு பயனுள்ள பல்வேறு தகவல்கள் தருவதுடன், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் பல்வேறு புதுப்புது தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.

விவசாயிகள் தங்களது வருமானத்தை பெருக்கி கொள்ள விளைநிலத்தில் பயிர் சாகுபடியுடன் மீன் குட்டை அமைக்கலாம் என வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அருணாச்சலம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறும்போது, கடலூர் மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனது. விவசாயம் செய்ய முடியாமல் போதிய அளவிற்கு வருவாய் இன்றி தவித்து வருகின்றனர்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மீன் குட்டை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையின்படி ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு விவசாயி 90 சென்ட் இடத்தில் நெல் போன்ற பயிர்களை பயிர் செய்யலாம். மீதமுள்ள 10 சென்ட் இடத்தில் மீன் குட்டை அமைக்கலாம். பின்னர் இதன் மீது வலை அமைத்து, அதற்கு மேலாக கோழியும் சேர்த்து வளர்க்கலாம். மீன்களுக்கு, கோழி கழிவை உணவாக பயன்படுத்தாலம், இது இல்லாமல் புண்ணாக்கு, கேழ்வரகு, சோளம், கோதுமை, போன்றவைகளை பொடியாக்கி உணவாக அவ்வப்போது கொடுக்கலாம்.

சாதாரண பயிர் சாகுபடியில் ஏக்கருக்கு ரூ.6 ஆயிரத்து 400 வரையில் செலவு,

விவசாயிக்கு வருவருமானம் 13 அயிரத்து 500 என்கிற நிலையில் இருக்கும். ஆனால் புதிய முறைபடி மீன்குட்டை, கோழி அதனுடன் பயிர் சாகுபடிக்கு ரூ. 13 ஆயிரத்து 900 வரையில் செலவாகும். ஆனால் வருமானமானது ரூ.28 ஆயிரத்து 500 என்கிற நிலையில் கிடைக்கும், என்றார்.

விவசாயிகளின் பார்வைக்காக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாதிரி மீன் குட்டை அமைத்து மீன் வளர்த்து வருகின்றனர்.

**வேளாண் தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

சோழவந்தான், : சோழவந்தானில் திருந்திய நெல் சாகுபடி குறித்து விவசாயி களுக்கு நெல் வயல் வெளி பயிற்சி முகாம் நடந் தது.

வேளாண் திட்டங்கள், மானியங்கள், நெல் விதைகள், திருத்திய நெல் சாகுபடியால் ஏற்படும் நன்மை குறித்து மதுரை வேளாண் இணை இயக்குநர் ஜெயசிங் ஞானதுரை பேசினார்.

புதிய களை எடுக்கும் இயந்திரம் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

வாடிப்பட்டி வேளாண் உதவி இயக்குநர் ராமநாதன், கட்டகுளம் ஊராட்சி தலைவர் சுமித்ரா, வேளாண் அலுவலர்கள் பானுமதி, மார்க்கண்டன், மகாராஜன், பாண்டியராஜன், உதவி வேளாண் அலுவ லர்கள் நடேஷ்குமார், சந்தனக்கருப்பு, வட்டார அட்மா தலைவர் சேகர், முன்னோடி விவசா யிகள் சுசீந்திரன், வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பருவ மழை பொய்த்து வருவதால் பிளாட்களாகும் விவசாய நிலங்கள்**

பரமக்குடி, : ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் பருவ மழை பொய்த்து வருவதால் கிராம பகுதியில் பிளாட் விற்பனைக்காக விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பளவில் நெல் விவசாயமும், 5 ஆயிரம் ஹெக்டே ரில் சிறுதானியங்களும், 4 ஆயிரம்

ஹெக்டேரில் பயறு வகைகளும், 6 ஆயிரத்து 700 ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்களும், 2 ஆயிரத்து 400 ஹெக்டேரில் பருத்தி செடியும் பயிர் செய்யப்படுகிறது.

இதற்காக மாவட்டம் முழுவதும் உள்ள பெரிய, சிறிய கண்மாய்கள், ஊரணிகள், போன்றவை விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்றன. பரமக்குடியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் சுமார் 250க்கும் மேற்பட்ட பெரிய பாசன கண்மாய்களும், 300க்கும் அதிகமான சிறுபாசன கண்மாய்களும், பாசன கண்மாய்களை பொதுப்பணித்துறையினரும், சிறிய கண்மாய்கள், ஊரணிகளை ஊராட்சி நிர்வாகத்தினரும் பராமரித்து வருகின்றனர்.

இந்நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நெல் உற்பத்தியை அதிகப்படுத்தவும், குறைந்த செலவில் அதிக மகசூல் எடுக்கவும், செம்மை நெல் சாகுபடி போன்ற புதிய முறையில் சாகுபடி தொழில்நுட்பத்தை அரசு அறிமுகப்படுத்தினாலும் போதிய அளவு மழைநீர் இல்லாததால் இந்த மாவட்டத்தில் விவசாயம் கேள்விக்குறியதாக மாறி வருகிறது.

ஏற்கனவே இந்தாண்டு வைகையில் வந்த தண்ணீர் முறையாக பாசன கண்மாய்களுக்கு கிடைக்கவில்லை. மழை பற்றாக்குறையால் நீரின்றி விவசாயம் பாதித்துள்ளது. இதையடுத்து பரமக்குடியைச் சுற்றியுள்ள கிராம பகுதி விவசாய நிலங்கள் பிளாட் விற்பனைக்காக அழிக்கப்படுகின்றன.

சில வருடங்களுக்கு முன்பு பலரும் தங்களிடம் இருந்த பணத்திற்கு தங்க நகைகளை வாங்கி சேர்த்தனர். தற்போது அதுவும் ஷேர்மார்க்கெட் போல தினமும் ஏற்ற இறக்கமாக உள்ளது.

இந்நிலையில் தற்போது பொதுமக்கள் மத்தியில் ரியல் எஸ்டேட் தொழில் அதிகரித்து வருகிறது. குறிப்பிட்ட இடங்களை குறைந்த விலைக்கு வாங்கும் நபர்கள் அதை முறையாக பராமரித்து செம்மண் சாலை அமைக்கின்றனர். பின்னர் பிளாட்டுகளாக பிரித்து விற்பனையை துவக்குகின்றனர்.சாலையோரத்தில் இருந்தால் அதற்கு ஒருவிலை உள்பகுதியாக இருந்ததால் அதற்கு ஒரு விலை நிர்ணயம் செய்து இடம் வாங்குபவர்களுக்கு விற்கின்றனர். இடத்தை வாங்கும் நபர்களும் ஒரு சில வருடங்களில் பணம் இரட்டிப்பு ஆகும் என்ற எண்ணத்தில் இடங்களை வாங்குகின்றனர். குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அதை கூடுதல் விலைக்கு விற்று கிடைத்த லாப பணத்தில் மீண்டும் புதிய இடத்தை தேர்வு

செய்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், மழை இல்லாததால் நாளுக்கு நாள் விவசாயம் அழிந்து வருகிறது. விவசாயம் இல்லாமல் வெறும் இடத்தை வைத்துக்கொண்டு இருப்பதைவிட, இருக்கும் இடங்களை பிளாட்டிற்காக விற்பனை செய்தால் ஒரளவிற்கு லாபம் கிடைக்கிறது. இதனால் பலரும் விவசாய இடங்களை விற்றுவிட்டு புதிய சூழலுக்கேற்ப வேறு தொழிலுக்கு மாறுகின்றனர் என்றனர்.

**நத்தம் வட்டாரத்தில் பரவலாக மழை பயறு சாகுபடி செய்ய வேளாண்துறை ஆலோசனை**

நத்தம், : நத்தம் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் பயறு சாகுபடி செய்யுமாறு வே ளாண் துறையினர் ஆலோ சனை வழங்கியுள்ளனர்.

நத்தம் வட்டாரத்தில் நத்தம், முளையூர், சமுத்திராபட்டி, சேத்தூர், செந் துறை, பரளி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் பரவ லாக மழை பெய்து வரு கிறது. இந்த மழையை பய ன்படுத்தி குறுகிய காலத்தில் மகசூல் தரக்கூடிய தட்டை ப்பயறு கோ (சிபி) 7 ரகத் தை விதைப்பு செய்யலாம்.

இதுபோன்று துவரை யில் அதிக மகசூல் பெற கோ.ஆர்.ஜி 5 விதையை சாகுபடி செய்தால் ஏக்கரு க்கு 4 குவிண்டால் வரை பெறலாம். விதைப்பு செய்வதற்கு முன் மண் பரி சோதனை செய்து கொள் வது அவசியம். விதைகள் பெற மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு அருகிலுள்ள வேளாண் அலுவலகத்தை அணுகலாம்.

பூக்கும் தருவாயில் ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் பயறு ஒண்டர் கரைசல் தயாரித்து தெளிக்கலாம். இதற்காக மானியம் வழங்கப்படுகிறது.

நெல் விதைப்பு: 115 நாட்களில் ஏக்கருக்கு 4000 கிலோ வரை மகசூல் தரக்கூடிய ஏ.டி.டீ 45 சான்று பெற்ற நெல் விதைகளை நடவு செய்து பயன்பெறலாம்.

திருந்திய நெல் சாகுபடி முறை: ஏக்கருக்கு 2 கிலோ விதை மட்டும் போதுமா னது. நாற்றாங்காலில் நெல் விதைப்பு செய்து, பயிர் வளர்ந்த 14 நாட்களில் நாற் றை பறித்து 25க்கு 25 செ.மீ. இடைவெளியில் வரிசை யாக வயலில் நடவு செய்ய வேண்டும். வரிசையாக நடவு செய்வதன் மூலம் களையெடுக்க வசதியாகும்.

களையெடுக்கும் செல வை குறைக்க நடவு செய்த 10 நாட்களுக்கு பிறகு கோ னோவீடர் கருவி மூலம் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டி களைகளை மண்ணிற்குள் புதைத்து உரமாக்கலாம் என நத்தம் வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்க வேண்டும்**

சிவகங்கை: மாவட்டத்தில் பயிர் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு உடனடியாக இன்சூன்ஸ் தொகை வழங்க வேண்டும் என உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.சிவகங்கையில் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்க மாவட்ட கூட்டம் அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் நடந்தது. மாவட்டத் தலைவர் அற்புதம், இளைஞரணி அமைப்பாளர் செயராசு, ஒன்றிய நிர்வாகிகள் சாமிநாதன், சேசு, லூயிசு, முனியசாமி, செல்வராசு மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் தந்தை, மகன் நிலத்தகராறு தொடர்பாக காளையார்கோவில் போலீஸ் ஸ்டேசன் சென்ற இயக்க நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்தி, பொய் வழக்குப்பதிவு செய்த காளையார்கோவில் போலீசார் மீது எஸ்பியிடம் கொடுக்கப்பட்ட புகார் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் தாமதிக்காமல் இழப்பீடு வழங்க வேண்டும். மானாமதுரை அருகே பாப்பாங்குளத்தில் வீடுகள் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி புதிய வீடு கட்டித்தர வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

03.09.2013

**வீணாகும் பழம், காய்கறிகளால் ரூ.2 லட்சம் கோடி வருவாய் இழப்பு**



புதுடெல்லி

சேமிப்பு கிடங்கு வசதி இல்லாததால் அறுவடைக்குப் பின் வீணாகும் பழம் மற்றும் காய்கறிகளால் ஆண்டிற்கு ரூ.2 லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்படுவதாக அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

குளிர் பதன வசதி

நவீன குளிர் பதன வசதி மற்றும் உணவு பதப்படுத்தும் வசதி இல்லாததால் உற்பத்தியாகும் பழம் மற்றும் காய்கறிகளில் பெரும் பகுதி வீணாகி விடுகிறது. இந்த வருவாய் இழப்பை குறைக்க உற்பத்தியில் மட்டுமின்றி சேமிப்பு கிடங்கு வசதியை மேம்படுத்துவதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் தோட்டக்கலைத் துறை என்ற தலைப்பில் அசோசெம் அமைப்பு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அதில், நம் நாட்டில் உற்பத்தியாகும் பழங்கள்

மற்றும் காய்கறிகளில் 22 சதவீதம்தான் மொத்த விலை சந்தைக்கு செல்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மொத்த விலை சந்தையை மேம்படுத்துதல், குளிர் பதன வசதியை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளால் பழங்கள் மற்றும் காய்கறிகள் வீணாவதை தடுக்க முடியும் என அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்கு வங்காள மாநிலத்தில்தான் அறுவடைக்கு பிறகு அதிக இழப்பு (ரூ.13,657 கோடி) ஏற்படுகிறது. அடுத்தபடியாக குஜராத்தில் ரூ.11,400 கோடி, பீகார் மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில் முறையே ரூ.10,700 கோடி மற்றும் ரூ.10,300 கோடி இழப்பு ஏற்படுகிறது.

உற்பத்தி

நம் நாட்டில் தற்போது ஆண்டுக்கு 15 கோடி டன் காய்கறியும், 7.70 கோடி டன் பழங்களும் உற்பத்தியாகின்றன. ஆக, இவற்றின் மொத்த உற்பத்தி 22.70 கோடி டன்னாக உள்ளது. இது, ஆண்டுக்கு சராசரியாக 6 சதவீதம் வளர்ச்சி கண்டு அடுத்த எட்டு ஆண்டுகளில் 37.70 கோடி டன்னாக உயரும் என ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.